ரெட்டமலை பாடல் + 91 9942684099

பல்லவி நா. ரவி ரங்கசுவாமி

- ரெட்டமல ரெட்டமல
  ஒன்டி கருப்பு ரெட்டமல
- ரெட்டமல ரெட்டமல
  நீலமேகம் ரெட்டமல
- ரெட்டமல ரெட்டமல
  பெரியண்ணன் ரெட்டமல
- ரெட்டமல ரெட்டமல
  மலைக்காளி ரெட்டமல

குலதெய்வ உறவே வா வா வா
கூடிக் கும்பிடுவோம் வா வா வா
குலம் செழிக்கவே வா வா வா
குலம் காத்திடவே வா வா வா

சரணம் 1

- கணபதியும் அருள்கிறார் ரெட்டமலயில
  நம்ம காவல் தெய்வமெல்லாம்
  நம்ம ரெட்டமலயில

- மறக்காமல் கும்பிடுவோம் ரெட்டமலயில
  வருஷா வருஷந் தவறாமல்
  தவிர்க்காமல் கும்பிடுவோம்

- குலதெய்வ பூஜ நடக்கும் ரெட்டமலயில
  கறிக்கொழம்பு அன்னதானம்
  சாப்பிடலாம் ரெட்டமலயில

கோழி ஆடு நேந்து விட்டு வேண்டிக்கோங்களே
உங்கள் குறைகளைச் சொல்லி வேண்டிக்கோங்களே
நேர்த்திக் கடன் நிறைவேற்றி பூஜை போடுங்களே
காணிக்கைகள் செலுத்தி கவலை தீருங்களே

சரணம் 1 தொடர்ச்சி

நா. ரவி ரங்கசுவாமி

- மலைக் குகைக்குள் வாழும் ராஜ நாகம்
  நாக தோஷம் போக்கும் தெய்வ நாகம்
- யானைமேல் பவனி வரும் ஐயனாரு
  வழித்துணையாய் வரும் ஐயனாரு - ரெட்டமல

சரணம் 2

- மனைவியருடன் அருளும் மதுர வீரன்
  மகிழ்ச்சியாய் வாழ வைக்கும்
  நம்ம பேச்சியம்மன்
- உற்சாகத்தை அருளும் உதிர கருப்பு
  எந்த குறையும் இல்லா வாழ்வு
  தரும் ஏழு கன்னியர்

- திரிசூலம் வேலாயுதம் ரெட்டமலயில
  தீராப் பிணியெல்லாம் நீங்கும்
  நம்ம ரெட்டமலயில

சின்னமலயும் பெரியமலயும் இணைஞ்ச ரெட்டமல
ரெட்டமலய நினைச்சாலே போகும் நம்ம கவல
மேற்கூறை இல்லாத மலைக் காளியம்மன்
முதல் வழிபாடு பெறும் மலைக் காளியம்மன்

உறவு முறைகள் சந்திக்கும் ரெட்டமலை
உறவுகளைப் புதுப்பிக்கும் ரெட்டமலை
சாதி மதம் கடந்த குலதெய்வம் ரெட்டமல
சமூக நல்லிணக்கம் பேனும் ரெட்டமல ( ரெட்டமல ..

பாட்டன் பூட்டனே வா வா வா
பாட்டி கதை சொல்லவே வா வா வா
பேரன் பேத்தியே வா வா வா
தலைமுறை தவறாம வா வா வா ( ரெட்டமல ..